
ரூ. 8.00

திருவள்ளுவர் ஆண்டு 2050 தை - பங்குனி
ஜனவரி - மார்ச் 2019.

மக்கள் சிந்தனை

சுதந்திரக் கொடி பறப்பதற்கு சுவாசக் காற்றைத் தந்த வீரர்களுக்கு அஞ்சலி

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்



சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2050 மாதம் : தை - பங்குனி

மலர் : 33 இதழ் : 1-3

சுதந்திரக் கொடி பறப்பதற்குச் சுவாசக் காற்றைத் தந்த வீரர்களுக்கு நம் அஞ்சலி

வெள்ளை ஏகாதிபத்தியத்தின் காலத்தில் 15 வயதுச் சிறுவன் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்ட காரணத்திற்காக குற்றவாளியாக நிறுத்தப்படுகிறான். நீதிமன்றத்தில் கேள்விகள் கேட்கப்பட்டன.

"உன் பெயர் என்ன"

"ஆசாத்" என்கிறான்.

"ஆசாத்" என்றால் "சுதந்திரம்"

"உன் தந்தையின் பெயர் என்ன" என்று கேட்கிறார்கள்.

"சுதின்" என்று சொல்கிறான்.

"சுதின்" என்றாலும் "சுதந்திரம்" என்றுதான் அர்த்தம்.

"நீ இருக்கும் வீடு"... என்று கேட்கிறார்கள்.

"சிறைச்சாலை" என்று சொல்கிறான்.

15 வயதுச் சிறுவனின் இந்தப் பதிலை எதிர்பாராமல் நிலை குலைந்த நீதிபதி உடனடியாக 15 கசையடிகளைத் தருமாறு தீர்ப்பளிக்கிறார். ஒவ்வொரு கசையடியும் அவன் உடம்பில் விழுந்தபோது, அந்தச் சிறுவன் "மகாத்மா காந்திக்கு ஜே..." என்று வீரம் செறிந்த குரலில் முழங்குகிறான்.

அன்று முதல் அவன் "சந்திரசேகர் ஆசாத்" என்று அழைக்கப்படுகிறான்.

தேசத்தின் விடுதலைப் போராட்டத்தில் ஒரு மகத்தான மனிதன் அவன்.

ஆசாத் தாய்நாட்டின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவன். அதைப்போல, தன் தாயின் மீதும் மாறாத அன்பு கொண்டவன்.

தன் தாயின் மீது மாறாத அன்பு கொண்ட காரணத்தினால், அவன் தாயைக் காண வருகிறபோதெல்லாம், அவனைக் கண்காணித்துக் கொண்டு இருந்த காவல்துறையைக் கண்டு, தாயைச் சந்திப்பதைத் தவிர்த்தான்.

அவன், தாய்ப்பாசத்தின் உச்சத்தில் அன்னையின் மீது கொண்ட அளப்பரிய அன்பில், "அன்னையே, எப்போதும் உன் நினைவாகவே இருக்கிறேன். உன்னைச் சந்திக்க முடியவில்லை என்று நீ வருத்தப்படாதே" என்று சொல்லிவிட்டு, அன்னையின் நினைவு எழும்போதெல்லாம் மண்ணில் முழங்காலிட்டு தலையால் மண்ணைத் தொட்டு "அம்மா... நான் உன்னை மறந்துவிட்டேன் என்று எப்போதுமே எண்ணாதே... நான் என்ன செய்வேன் தாயே? உன் அருகில் வரமுடியாத என்னை மன்னித்து விடு...." என்று கண்ணீர் விட்டு அழுவான் ஆசாத்.

தாயை விடத் தாய்மண்ணை நேசித்த விடுதலைப் போராட்ட வீரர்களைச் சந்தித்த மண்தான் இந்த மண். இந்த மண்ணுக்குரிய தாய்ப்பற்றைப்போல, தாய்நாட்டுப்பற்றைப்போல, தமிழ்நாட்டுத் தாய்மார்களும் அதே பற்றினைக் கொண்டிருந்தார்கள்.

தமிழ்ப் பண்பாட்டில் வீரம் என்பது வேராக விளங்கியது. வீரம் என்பது தமிழ்ப் பண்பாட்டுக்குரிய மகத்தான மந்திரச் சொல்லாக இருந்தது. வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருந்தது. அகம், புறம் என்று பேசப்பட்டதில் வீரம் தலைசிறந்து விளங்கியது. அந்த வீரத்திற்கான அடையாளத்தை நாம் பரக்கப் பார்க்கமுடிகிறது.

தமிழகத்துத் தாய் ஒருத்தி பற்றி "ஒக்கூர் மாசாத்தியார்" என்ற புலவர் பாடுகிறார். அவர் பாடிய பாடலில்,

முதல் நாள் ஒரு பெண்ணின் கணவன், பகைவன் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்பதற்காகப் போருக்குப் போனவன் மடிந்துவிட்டான். அதற்கு முதல்நாள் அந்தப் பெண்ணின் தந்தை

91/1

போருக்குப் போனார். அவர் யானையை எதிர்த்து இறந்துவிட்டார். மறுநாளும் போர்ப்பறை ஒலிக்கிறது. இருவரின் இழப்பிற்குப் பிறகும், அந்தப் பெண்மணி மகிழ்ச்சியுடன் தன் மகனைப் போருக்கு அனுப்புகிறாள். வயதில் மிகச் சிறியவன். தலை சீவத் தெரியாதவன். தன் ஆடையைத் தானே உடுத்தத் தெரியாதவன்.

அவனுக்குத் தலையில் எண்ணெய் தடவி, சீவி முடித்து, அந்தச் சிறுவனின் கையில் வேல் கொடுத்துப் போருக்கு அனுப்புகிற காட்சியைப் பார்க்கிறபோது தமிழ்நாட்டு வீரம் எப்படி வேரூன்றி இருக்கிறது என்பதற்கான அடையாளத்தை நாம் காண முடிகிறது.

போர்க்களத்தில் நேருக்குநேர் சந்தித்துப் போரிடுவது தான் மரபு. ஆனால், அந்த மரபை இன்றைக்கு நாம் காண முடிகிறதா? நம் எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்களைத் தொலைத்தோமே.... அந்த மரபின் வழியை நம் வீரர்களுக்குத் தந்தார்களா?

வீரம் என்பது போர்க்களத்தில் நேருக்கு நேர் சந்திப்பது. விழுப்புண்ணைச் சுமப்பது அல்லது வீரமரணத்தைத் தழுவுவது. அந்தோ பரிதாபம்!

தமிழ்நாட்டுப் பண்பாட்டின் வீரத்தின் அடையாளமாய் போருக்குப் போனவர். சமய வாழ்க்கையில் ஏனாதி நாத நாயனார் என்ற அடியவர் எப்போதும் போர்த்தொழில் பயிற்சி கொடுப்பவர். அவரிடம் பயிற்சி பெற்ற வீரர்கள் சிறந்த போர் வீரர்களாக வருவார்கள். அதிசூரன் என்பவன் அவர் மீது கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான். அவரது வீரத்தைக் கண்டு பொறாமைப்பட்டான். புழுங்கினான். பலமுறை ஏனாதி நாத நாயனாரைப் போர்க்களத்தில் அவன் சந்தித்தான். அதிசூரன் தோற்றே போனான்.

ஒருநாள் வஞ்சக எண்ணத்தோடு அவரை தனியாய்த் தான் வரவேண்டும் என்று சொல்லிப் போருக்கு அழைக்கிறான். போர்க்களத்தில் ஏனாதி நாத நாயனார் அருகே செல்கிறவரை, அவன் கேடயத்தால் தன் முகத்தை மறைத்து வைத்திருந்தான். அவரருகே சென்றதும் தன் முகத்தைக் காட்டுகிறான். திருவெண்ணீற்றுக் கோலம். சிவனடியார் மீது மாறாத பக்தியும், பேரன்பும் கொண்டவர் ஏனாதி நாத நாயனார். திருநீற்றுக் கோலம் தாங்கிய அதிசூரனைப் பார்த்தவுடன் அப்படியே தடுமாறிப் போகிறார். எதிர்த்துப் போரிடாமல் போரிடுவது போல்

நடித்து, அதிசூரன் நிராயுதபாணியைக் கொன்றுவிட்டான் என்ற பழிச் சொல் கூட வந்துவிடக் கூடாது என்பதற்காக போர்க்களத்தில் போரிடுவது போல் நடித்து அதிசூரனிடம் போரிட்டுத் தோற்கிறார். வீரமரணத்தைத் தழுவுகிறார்.

போர் அறம் என்று ஒன்று உண்டு. போர்க்களத்தில் யாரோடு போரிடவேண்டும் என்ற அறம் உண்டு. ஆயுதம் இல்லாதவர்களை, பெண்களை, முதியவர்களைப் போரில் தாக்கக்கூடாது. அவர்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடாது. இன்றெல்லாம் அந்தப் போர் அறம் மீறப்பட்டுவிட்டது. மாலைக்காலம் வந்துவிட்டால் போர் நிறுத்தப்படும். அந்தி சாய்கிற நேரத்தில் போர் நிறுத்த அறிவிப்பு வெளிப்படும். ஆனால், இன்றெல்லாம் எந்த நேரத்திலும், எப்போதும் எங்கும் எதிர்பாராத நேரத்தில் தலைகீழாக தடுமாற வைக்கிற நிலையில் தாக்குதல்கள்.

கரிகால் பெருவளத்தானும், சேரமான் பெருஞ்சேரலாதனும் போரிடுகிறார்கள். சேரமான் பெருஞ்சேரலாதன் முதுகு கரிகால் பெருவளத்தான் பயன்படுத்திய ஆயுதத்தின் தாக்குதலால் புண்பட்டுவிடுகிறது. நெஞ்சில் செருகிய வேல் முதுகிற்குச் சென்றுவிடுகிறது. வீரத்தின் விழுப்புண்ணைச் சுமந்த சேரமான் பெருஞ்சேரலாதனின் முதுகில் காயம் பட்டு விட்டதால் இது விழுப்புண் அல்ல. தமக்கு அவமானம் என்று வடக்கிருந்து உயிர் துறக்கிறார். இதை வெண்ணிக் குயத்தியார் பாடுகிறார்.

"கரிகால் வளவா! நீ போரில் வெற்றி பெற்றாய்... உனக்கு வெற்றியைத் தந்தவன் சேரமான் பெருஞ்சேரலாதன் விழுப்புண்ணைச் சுமந்தான். விழுப்புண்ணைச் சுமந்த பெருமைக்குரியவன். ஆனால், அந்த விழுப்புண் முதுகு வரைச் சென்று விட்டதால், நெஞ்சுப் புண் முதுகுப் புண்ணாகிவிட்டதே" என்று வடக்கிருந்து உயிர்துறந்தானே... அவன் உன்னைவிட நல்லவன் அல்லவா!" என்று பாடுகிறார். இதுதான் போர் அறம்.

இராமனும், இராவணனும் போரிடுகிறார்கள். உச்சக்கட்ட கடைசிப்போர். இராவணன் நிராயுதபாணியாக நிற்கிறான். ஆயுதம் இல்லாமல், படைகள் இல்லாமல் தன்னந்தனியே நிற்கிற இராவணனைப் பார்த்து, "இன்று போய் நாளை வா" என்று இராமன் சொல்வார்.

இதுதான் போர் அறம். நிராயுதபாணியாய் இருக்கிறவனைத் தாக்குவது ஒருபோதும் போர் அறம் ஆகாது.

இன்று நடந்தது என்ன? ஜம்மு – காஷ்மீர் தாக்குதலில் இந்தியப் பெரும்படை வீரர்கள் 40 சி.ஆர்.பி.எப். வீரர்களை இழந்துவிட்டோம். தமிழகத்து வீரர் வீர. சுப்பிரமணியனையும் நாம் இழந்து நிற்கிறோம். வீர சுப்பிரமணியனின் குடும்பம் கிருஷ்ணவேணி என்ற பெண்ணைக் கரம் பிடித்து ஓராண்டுகூட திருமண வாழ்க்கையைக் கடக்காதவர். தேசம் காக்கிற போரில் தன்னைத் தந்து விட்டார். அவரின் தந்தை வருவோரிடமெல்லாம் "என் மகன் காயம்பட்டு விட்டானா?" என்று கேட்கிறார். தன் மகன் இறந்த இழப்பை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் தவிக்கிறார். இப்படிப்பட்ட போர்வீரர்களின் நிலையை எண்ணிப் பார்க்கிறபோதுதான், நம் தேசம் எங்கே சென்று கொண்டிருக்கிறது? என்று நினைக்கிறோம்.

குழந்தை இறந்தால் கூட வாளால் கீறிப் புதைப்பது தமிழர் மரபு. குழந்தையாய் இறந்து பிறந்தாலும், உருவமின்றி தசைப் பிண்டமாய் பிறந்தாலும், அந்தக் குழந்தையை வாளால் கீறி, அது விழுப்புண்ணைச் சுமந்த பின் தான் புதைக்கப்படும். அதுதான் தமிழரின் வீர மரபு.

சேரமான் கணைக்கால் இரும்பொறை என்பவன் சோழன் செங்கணான் என்பவனிடம் போரில் தோற்றதால் சிறையில் அடைக்கப்பட்டான். ஒருநாள் தாகத்தின் உச்சத்தில் தண்ணீர் கேட்கிறான். தண்ணீர் தருவதற்குத் தாமதம் ஏற்படுகிறது. தாமதமாய்த் தந்த தண்ணீரை அருந்தாமல், "இப்படி வாழ்வதை விட உயிரை விடுவது மேல்" என்று சொல்லித் தன் உயிரை விடுகிறான். தன்மானத்தின் உச்சத்தில் இருந்தான் கணைக்கால் இரும்பொறை. தன்மானத்தின் உச்சத்தில் வாழ்வது தான் தமிழர் மரபு. தன்மானமும், இனமானமும் தமிழர்களிடம் இரண்டறக் கலந்தது.

வடபுலத்து வேந்தர்கள் சேர, சோழ, பாண்டியர்களை இகழ்ந்து பேசினார்கள். அப்படி இகழ்ந்து பேசியவர்களை சேரன் செங்குட்டுவன் வடபுலத்திற்குப் படைபெயடுத்துச் சென்று வென்றான். அப்போது கண்ணகி சிலைவடிக்கக் கல்லெடுத்து வந்தான். தன் வெற்றிச் செய்தியை

அறிவிக்கிறான். ஆனால், மூவேந்தர்களில் மற்றவர்களுக்கு அவன் வெற்றிச் செய்தியை ஏற்றுக்கொள்ள மனமில்லை. இகழ்ந்தும் பேசுகிறார்கள். தன் அவமானமாய் நினைக்காமல் சக வேந்தர்களின் அவமானத்தையும் தமிழர்களின் தன்மானமாய் எண்ணிப் பார்த்தான் சேரன் செங்குட்டுவன். ஆனால், மற்றவர்கள் அப்படி எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டார்கள்.

டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் 2001ஆம் வருடம் செப்டம்பர் 30ஆம் நாள் ஜார்கண்ட் மாநிலம் இராஞ்சியிலிருந்து பொக்கராவிற்கு ஹெலிகாப்டரில் வருகிறபோது, ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானது. அன்று அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இறைவனுக்கு நன்றி செலுத்திவிட்டு அன்றைய பணிகளைச் செய்தார். அன்று இரவு ஆழ்ந்த உறக்கம் இல்லாமல் அந்த விபத்தின் அதிர்ச்சியில் அவருக்கு ஒரு கனவு தோன்றியது. அந்தக் கனவில் மகத்தான மாமன்னன் அசோகன், மகாத்மா காந்தியடிகள், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ஆப்ரஹாம் லிங்கன் மற்றும் கலிபா ஓமர் ஆகியோர் தோன்றினார்கள்.

மன்னர் அசோகர் கலிங்கத்துப் போர் வெற்றியின் களத்தில் நிற்கிறார். அந்தப் போர்க்களக் காட்சி எங்கும் கொடூரத்தை அடையாளம் காட்டுகிறது. அதே நேரத்தில் இறைமையின் ஆசீர்வாதம் விண்ணிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கிறது. அந்த நேரத்தில் கலிங்கப் போரின் வெற்றிக்கு அவர் கொடுத்த விலை என்ன? மூன்று லட்சம் பேர்களைப் பலிகொடுத்து, மூன்று லட்சம் பேர் காயப்பட்டு அந்த வெற்றி பெறப்பட்டது. அந்த வெற்றி அவருக்கு மனமகிழ்ச்சியை, நிம்மதியைத் தரவில்லை. அப்போதுதான் இயற்கையே அவரது வெற்றிக்கு எதிராக கண்டனக் குரல் எழுப்பியது போல இருந்தது. அஹிம்சைத் தர்மம் அந்தச் சமயத்தில் தோன்றியது. மனிதகுலத்தின் மேன்மைக்காக அன்பைப் பரப்ப வேண்டும் என்ற ஆண்டவனின் கட்டளையை அவர் அந்தத் தருணத்தில் ஏற்றுக்கொண்டார்.

அப்போது "துயரத்தை விளைவிப்பதில் எந்த வெற்றியும் இல்லை என்பதை நான் உணர்ந்து விட்டேன். வெற்றி என்பது அமைதி தவழும் இராஜாங்கமே" என்று அசோகர் குறிப்பிட்டார்.

அந்தத் தருணத்தில் மகாத்மா காந்தி, "வெவ்வேறு மதங்களை, இனங்களைச் சேர்ந்தவர்களும், பல்வேறு மொழிகள் பேசுவோரும்

அதியாகவும், வளமையாகவும் எப்படி இணைந்து வாழ வேண்டும் என்ற செய்தியைத் தான் நாம் வழங்க வேண்டும்" என்று சொன்னார்.

அப்போது கலீபா ஓமர், "அனைத்து மனிதர்களும் சமம் என்பதை ஜெருசலேமில் நுழைந்த பிறகுதான் நான் கற்றுக்கொண்டேன். ஒருவருடைய பாதையைப் பின்பற்றுமாறு மற்றவர்களைப் பலவந்தப் படுத்துவதில் எந்தவிதத்திலும் சரியில்லை. உங்களுக்காக என்ன விதிக்கப்பட்டுள்ளதோ, அதை மட்டும் நீங்கள் அடைவீர்கள். இறைவன் மட்டுமே மேலானவன்" என்று குறிப்பிட்டார்.

ஐன்ஸ்டீன் தன் நண்பர் வெர்னர் ஹீசன்பெர்க்கின் கருத்தோட்டத்தை நினைவுபடுத்துகிறார். "மேற்கில் நாம் மிகப்பெரிய அழகான ஒரு கப்பலை உருவாக்கினோம். அனைத்து வசதிகளும் கொண்ட அதில், ஒன்று மட்டும் இல்லாமல் போய்விட்டது. திசை காட்டும் கருவி அதில் கிடையாது. எந்தத்திசையில் செல்ல வேண்டும் என்பது புலப்படவில்லை. தாகூர், காந்தி போன்றவர்களும், அவர்களது ஆன்மீக மூதாதையர்களும் திசைக்காட்டும் கருவியைக் கண்டுபிடித்தார்கள். இருதரப்புமே தத்தம் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் இந்தத் திசைகாட்டும் கருவியை மனிதக் கப்பலில் ஏன் பொருத்தக்கூடாது" என்று கேட்கிறார்.

"மக்களுக்கும், நாடுகளுக்கும் இடையே பெருமளவில் மோதல்கள் ஏற்பட வாய்ப்பிருக்கலாம். ஏனென்றால் முன்னேற்றத்திற்கும், அதிகாரத்திற்கும் மேற்கொண்ட முயற்சிகளின்போது, தார்மீக நீதி நெறிகளை நாம் புறக்கணித்து விட்டோம். மனித சுய உணர்வின் பங்களிப்பு என்ன என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். அரசியல் சிந்தனை, அறிவியல் சிந்தனை மற்றும் சித்தாந்தச் சிந்தனைகளில் அதற்கு இடமிருக்கிறதா? வாழ்க்கை நீரோட்டத்தில் தெய்வீகத் தன்மை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதா?" என்று ஆப்ரஹாம் லிங்கன் கேட்கிறார்.

மகாத்மா காந்தியடிகள் நிறைவாகச் சொல்கிறார். அஷ்டவக்கிர முனிவரின் அருளுரையை மகாத்மா காந்தி நினைவு கூறுகிறார். "வாழ்க்கை நீரோட்டம் அமைதியும், செழுமையும் நிறைந்ததாக இருக்கட்டும். சுரண்டலுக்கும், மோதலுக்கும் இடமிருக்கக்கூடாது என்று சொன்னார்.

இதுதான் இந்த பூமிக்கு நாம் விடுக்கும் செய்தி. நமது அனைத்துச் செய்திகளும், நாம் பின்பற்றும் எந்தக் கோட்பாடும், மனிதகுலத்தின் மேன்மைக்காக மட்டுமே அமைந்திருக்க வேண்டும். மனித குலத்தின் மேன்மையை நோக்கி ஊர்கள், நாடுகள், மனிதர்கள், சாதி, சமய எல்லைகளைக் கடந்து ப்பயணித்தால் மனிதகுல மேம்பாட்டின் எல்லா அடையாளங்களையும் கொண்டு இலக்கு நோக்கி பயணித்தால் உலகம் அமைதிப் பூங்காவாகத் திகழும். இந்த மண்ணுலகமே சொர்க்கமாகும். இதுதான் கலாம் அவர்கள் கண்ட கனவு. அந்தக் கனவு நனவாகுமா? இதுதான் நம் ஆழ்ந்த கவலையோடு கூடிய சிந்தனை. அந்தக் கனவை நனவாக்குவது நம் இளைய தலைமுறையின் கையில் இருக்கிறது.

ஆனால், இன்று பார்க்கிறோம். இந்திய தேசத்து எல்லையைக் காப்பதற்காக நம்முடைய 40 வீரர்களைப் பலி கொடுத்திருக்கிறோம். எண்ணிக்கை அல்ல இந்தப் பலியின் பட்டியல். நம்மால் ஒரு கோப்பைத் தேநீரைத் தியாகம் செய்ய முடியவில்லை. நம்மால் ஒருவேளை உணவைத் தியாகம் செய்ய முடியவில்லை. மின்சாரம் ஒரு மணி நேரம் நின்று போனால் நாம் தவித்துப் போகிறோம். எல்லாவற்றிலும் சுகமாய் வாழவே ஆசைப்படுகிறோம். மனைவி, மக்களை மறந்து கொட்டும் பனியிலும், குளிரிலும், வாட்டும் வெயிலிலும், சூறைக் காற்றிலும் தேசம் காக்கப் போரிடுகிற அந்தப் போர் வீரர்களது வீரமரணம் விடிவெள்ளி வெளிச்சமாக, ஒளிவிளக்கு வெளிச்சமாக நமக்குத் தெரிகிறது. இந்தத் தேசத்தின் சுதந்திரக் காற்றில் பட்டொளி வீசி சுதந்திரக் கொடி பறப்பதற்கு சுவாசக் காற்றைத் தந்த அந்த வீரர்களுக்கு நாம் அஞ்சலி செலுத்துவோம்.

"நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது"

என்ற குறளுக்கு இலக்கணமாய் மரணத்தை வென்று வாழ்ந்த அந்த மாவீரர்களுக்கு நாம் கண்ணீரால் மட்டுமல்ல வாழும் வாழ்க்கையாலும் நன்றி செலுத்த வேண்டும். அதுவே தேசத்திற்குச் செய்கிற உண்மையான கைம்மாறு.

குன்றக்குடி அடிகளார் (கையொப்பம்)

காரைக்குடி மத்திய மின்வேதியியல் ஆய்வகத்தின் (CECRI) 13ஆவது இயக்குநராகப்பொறுப்பேற்றிருக்கும் விஞ்ஞானி. **ந. கலைச்செல்வி** அவர்களை

"மக்கள் சிந்தனை" பாராட்டி வரவேற்கிறது!



விஞ்ஞானி ந. கலைச்செல்வி அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்தவர். வேதியியலில் முனைவர் பட்டம் பெற்றவர். 1997இல் காரைக்குடி மின்வேதியியல் ஆய்வகத்தில் விஞ்ஞானியாகப் பணியில் சேர்ந்தார். இந்த ஆய்வகத்தில் மின்வேதியியல் ஆற்றல்சார் துறையில் வித்தியம் மின்கல ஆய்வுகளைச் செய்து வருகிறார். 13க்கும் மேற்பட்ட ஆய்வுகளை தேசிய மற்றும் உலகளவில் அறிவியல் இதழ்களில் வெளியிட்டுள்ளார். மேலும் ஆய்வுகளின் மூலம் இரண்டு காப்புரிமைகள் பெற்றுள்ளார். 22 ஆண்டுகால ஆராய்ச்சியில் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

குன்றக்குடியிலிருந்து வெளிவரும் சுதேசி விஞ்ஞான இயக்கத்தின் அறிவியல் மாத இதழான "அறிக அறிவியல்" ஆசிரியராக அமைந்து சிறப்பாகப் பணிசெய்து வருகிறார். சிறந்த சொற்பொழிவாளர், எழுத்தாளர். இவர் காரைக்குடி மத்திய வேதியியல் ஆய்வகத்தின் இயக்குநராகியிருப்பதை "மக்கள் சிந்தனை" பாராட்டி வரவேற்று மகிழ்கிறது.

– ஆசிரியர்

திருவாசக உவமைகள்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

இரைதேர் கொக்கு

ஆற்றங்கரைகளிலும் - குளத்தங்கரைகளிலும் கொக்கு அமைதியாக உட்கார்ந்து கொண்டிருக்கும். பரபரப்பின்றி – தவம் செய்வது போல உட்கார்ந்து கொண்டிருக்கும். ஏன்? இரையை எதிர்பார்த்து உட்கார்ந்து கொண்டிருக்கின்றது. கொக்குக்கு இரை மீன்! அம்மீன்கள் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றின் கரையில்தான் அது உட்கார்ந்து கொண்டிருக்கின்றது. ஏன் ஓடுகிற மீன் குஞ்சுகளை – மீன்களைப் பிடிக்கக் கூடாதா? பிடிக்கலாம்; தடையில்லை. ஆனால், வயிற்றுக்குப் போதுமானதாக – திரும்பத் திரும்பப் பிடிக்க வேண்டிய அவசியமில்லாதபடி ஒரே முயற்சியில் பிடித்து உண்ணும் அளவிற்குப் பெரிய மீன் வரும்வரைக் காத்திருக்கின்றது. இந்தக் காட்சியும் கொக்கின் வாழ்க்கை முறையும் கவராத கவிஞர்கள் கிடையா? மாணிக்கவாசகரும் இந்தக் காட்சியில் – வாழ்க்கையில் கவர்ச்சிக்கப்பட்டுள்ளார். தாமும் இரைதேர் கொக்குபோல வாழ்ந்ததாகக் கூறுகிறார்.

உயிருக்கு இரை இறைவனின் திருவருளேயாம். உடற்பசிக்கு எடுக்கும் இரை மீண்டும் மீண்டும் பசியைத் தோற்றுவிக்கும். ஆதலால், உயிர் மீண்டும் பசிக்காத அனுபவிப்பதால் மேலும் மேலும் இன்பப் பெருக்கினைத் தருகின்ற இறைவனின் திருவருளையே உணவாக ஏற்று உண்டு தேக்கெறிந்து வாழ்தல் வேண்டும். இந்த வேட்கை மாணிக்கவாசகரின் பெருவிருப்பம். மாணிக்கவாசகப் பெருமான் உடல் தாங்கி உலவினாலும், உடம்பு நீங்கி விடுதலை பெறுதலையே விரும்பினார். அவரது விருப்பம் கை கூடுவதற்குரிய காலத்தை அவர் எதிர்பார்த்துக் காத்திருந்தார். இடைவெளியில் அமைச்சு அதிகாரம் பரிசுகள் வாங்குதல் ஆகிய பல்வேறு கவர்ச்சிகளுக்குரிய பேறுகள் கிடைத்தும் மாணிக்கவாசகர் அவற்றில் நின்று நிலைத்து அனுபவிக்கவில்லை. சமய வாழ்க்கையின் சிறந்த நோக்கம் இம்மையும் மறுமையும் ஒருங்கே நலம் பெறுதலேயாகும். மாணிக்கவாசகர் இம்மை நலன்களை தம்மைத் தேடி வந்தவற்றைத்

துச்சமென உதறித் தள்ளினார். "பொன் வேண்டேன்; புகழ் வேண்டேன்; பொருள் வேண்டேன்" என்று பாடுகின்றார்.

கொக்கின் நிறம்போல மாணிக்கவாசகர் அகத்தாலும் புறத்தாலும் தூயவர்–கொக்கு உட்கார்ந்திருக்கும் ஆற்றில் புனலும், போகத்துக்குரிய மீன்களும் ஓடுதல்போல, மாணிக்கவாசகர் அமர்ந்திருந்த அரசவை வாழ்க்கையில் பொருள்களும் போகமும் புரண்டன. கொக்கு, ஓடிய எல்லா மீன்களையும் பிடிக்காதது போல அவர், தமக்குக் கைக்கு எட்டினவாக இருந்த எந்தப் பொருள்களையும் போகங்களையும் விரும்பினாரில்லை. கொக்கிற்குத் தனக்குத் தேவையானதும் போதுமானதுமான மீன் என்று தேர்ந்தெடுக்கும் அறிவு இருப்பதால் ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடிக் காத்திருக்கிறது. மாணிக்கவாசகரும் ஞானம் கைவரப் பெற்ற வரானமயால் நிலையில்லாதவற்றைத் தெளிவுற உணர்ந்து நிலையான திருவருட் பேற்றை விரும்பி நிற்கிறார். நாம் விரும்புவதொன்று விரும்பியவுடன் கிடைத்துவிடுவதில்லை. அதற்காகப் பலகாலும் காத்திருக்க வேண்டிவரும். அதுமட்டுமின்றி, கொக்கு ஆற்றங்கரையில் பெரிய மீனுக்காகக் காத்திருக்கிறது. பெரிய மீன் கிடைக்குமளவு இரவுபகல் என்று பாராமல் காத்திருக்கின்றது. காற்று, வெயில் மழை, இன்னபிற இயற்கைத் துன்பங்களை ஏற்றுப் பொறுத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறது. அதுமட்டுமா? அந்தக் கொக்கையே கொல்லும் பகை மனிதனும் நடமாடுகிறான். அவனுடைய குறியிலிருந்தும் அது தப்பி, இடம்மாறித் தற்காத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறது. அதுபோலவே, இறைவனுடைய திருவருளைப் பெற்று ஆரத் துய்க்க வேண்டும் என்றும் விரும்புகிற ஆன்மா இரவு பகல் என்று பாராமல், முயற்சிக்க வேண்டும். மாணிக்கவாசகர் கங்குல் பகற்பொழுது எல்லாம் கரைந்து அழுது திருவருளைப் பெற முயற்சித்தார். திருவருள் பெறும் முயற்சியில் உலகும், உலகியலும் தீராத் தொல்லைகள் தரும். அத்துன்பங்களையும் இன்பமாகக் கருதி ஏற்றுக்கொள்ளாவிடில் திருவருட்பேறு சித்திப்பதில்லை. மேலும், எப்படி கொக்கையே சுடும் மனிதன், நடமாடுகிறானோ அப்படியே நம்மையே தன்னுணர்வளித்து நெறியல்லா நெறிதன்னில் பயின்று மூர்க்கராகி முதலிழந்து அழியச் செய்யும் பொறிகளும் புலன்களும் பகை காட்டுகின்றன. மாணிக்கவாசகர் தாம் இப்படி அலைக்கப்பட்டதாகத் தம்மீது ஏற்றிக் கூறுகின்றார். ஒன்றைப் பெறாமையினால், துன்பம் உண்டாக வேண்டும். அத்துன்பத்தினால் நாம் வாடுதலும் வேண்டும். அப்பொழுதுதான் பெறாமைக்குரிய காரணங்களை

நீக்கி, பெறுவதற்கு முயற்சிகளைக் கவலையுடனும் அக்கரையுடனும் மேற்கொள்ள முடியும். ஆதலால், இறைவனுடைய திருவருளைப் பெறாது அல்லற்படுபவர்கள் அதற்காகத் துக்கப்பட வேண்டும்; வாடுதல் வேண்டும். மாணிக்கவாசகர் இப்படித் துக்கித்தார் - வாடினார் என்பதை அவருடைய நூலாகிய திருவாசகமே நமக்குணர்த்தும். இரைதேர் கொக்கொத்து ஏசற்றிருந்தே வேசற்றேன் என்பது மாணிக்கவாசகரின் மணிமொழி. முழுப்பாடலையும் அனுபவிப்போம்:

அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலில் நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ?

பொற்கிண்ணம்

சிவானந்த அனுபவத்தில் திளைத்த மாணிக்கவாசகருக்கு உலகியல் சான்றுகள் எளிதில் கிடைக்கின்றன; அவர் மிகச் சிறந்த உண்மைகளை விளக்க எடுத்தாளும் உவமைகள் எளியனவாக இருக்கின்றன. நடைமுறையை ஒட்டியனவாகவும் இருக்கின்றன என்பது உணர்ந்தின் புறத்தக்கது.

உலகியலில் அறியா மக்கள் தாம் முயன்று பெற்றவற்றையேகூட அருமை கருதித் தொடர்ந்து போற்றிக் காப்பாற்றுவதில்லை. மிக மோசமான இயல்புடைய மக்கள் தங்களுக்கு எளிதில் கிடைக்கும் எதையும் அதனுடைய தகுதியறிந்து போற்றுவதில்லை. பன்றியின் முன்னே முத்தை வாரியிறைத்தது போலவும், கழுதையின் மீது குங்குமப் பூவைச் சுமத்தியது போலவும் ஆகிவிடும், அறியா மாக்களுக்குச் சான்றோர் செய்யும் உதவிகள் பலகால் கேட்டுப் பெறுவதைவிடக் கேளாமல் கிடைப்பதைப் போற்றும் இயல்பு பொதுவாக மக்களிடத்து இருப்பதில்லை. அருமையை உணர்ந்து பாராட்டுவதற்குப் பதிலாக அந்த உதவியைச் செய்யும் இயல்புக்கும் ஏதாவதொரு உள்நோக்கம் கற்பித்துக் களங்கப்படுத்தவும் செய்கின்றனர்

இவ்வாறு, கேட்டுப் பெறுவதைவிடக் கேளாமல் கிடைப்பதைப் போற்றும் இயல்பினை, மாணிக்கவாசகர் தம்முடைய அனுபவத்தின் மீதேற்றி விளக்குகிறார்.

ஒரு செல்வந்தரின் வீடு – தங்கம் தாராளமாகப் புழங்கும் வீடு – ஒரு நாள், வீட்டுத் தலைவி சாமான்களை எண்ணிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது அவள் அருகில் இருந்த அவளுடைய அருமைக் குழந்தை அங்கிருந்த பொருள்களில் ஒன்றாகிய தங்கக் கிண்ணத்தை விரும்பிக் கேட்டது. தாயும் கொடுத்தாள். குழந்தை தங்கத்தின் மதிப்பறிந்து கேட்கவில்லை. ஏதோ ஒரு பொருள். மற்றவர்கள் வைத்திருக்கிறார்கள்; அது தனக்கும் வேண்டும் என்ற எண்ணத்தில் தான் கேட்கிறது; குழந்தை அந்தத் தங்கக் கிண்ணத்தை வாங்கியதும் விளையாட்டுப் போக்கில் வீதிப்பக்கம் வருகிறது. அப்போது அது, தனக்கு மிக உவப்பான – பிடித்தமான கற்கண்டு கட்டிகளையோ, வைத்து விளையாடுதற்குரிய விளையாட்டுப் பொருள்களையோ யாராவது தந்து தங்கக் கிண்ணத்தைக் கேட்டால் கொடுத்துவிடும். அதற்குத் தங்கக் கிண்ணத்தின் மதிப்புத் தெரியாது. பொம்மைகளைப் போட்டு உடைத்து விளையாடுவது போலத் தங்கக் கிண்ணத்தைப் போட்டு விளையாடவும் செய்யலாம். காரணம், அது அறியாக் குழந்தை.

அது போல,

இறைவன் உயிர்களுக்குக் கருணையினால் மாறிலாக் கருணையை வழங்குகின்றான். எனினும் பல உயிர்கள் அதைப் போற்றிப் பாதுகாத்துக் கொள்வதில்லை. இறைவன் கருணை நிறைந்தவன் என்பதையுணர்த்தும் வண்ணம். அவன் அம்மையப்பனாகவே விளங்குகின்றான். அவன் உயிர்கள் இருக்கும் இடம்தேடி, இல்லங்கள்தோறும் எழுந்தருளித் திருவடித் தாமரைகளைக்காட்டி ஆட்கொள்ளுகின்றான். மாணிக்கவாசகப் பெருமானையும், பெருந்துறையில் பிச்சதியற்றி ஆட்கொண்டதாகவும், தான் அதன் அருமையை உணராததாகவும் மேற்கண்ட உவமையின் வாயிலாக விளக்குகின்றார். இக்கருத்தமைந்த அழகிய பாடல் இதோ :

மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்

அரியை என்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்மை யன்பருள் மெய்ம்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டு நீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே!"

தங்கத்தின் மதிப்பறியாக் குழந்தைபோல தன்னைக் கற்பனை செய்து கொள்ளுகின்றார் மாணிக்கவாசகர். தங்கக் கிண்ணம் போன்றது இறைவன் வழங்கிய தண்ணருள்.

அடுத்து, குழந்தை தங்கக் கிண்ணத்தின் மதிப்பறியாது கெடுத்தாலும் குழந்தையின்மீது யாரும் குற்றம் சொல்லமாட்டார்கள். ஆதலால், குழந்தையின் கையில் கொடுக்கப்பெற்ற தங்கக் கிண்ணத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அத்தாய்க்கு இருக்கிறது. அதையுணர்ந்த தாய் குழந்தையைத் தொடர்ந்து சென்று அந்தப் பொற்கிண்ணத்தைக் காப்பாற்றுவதுபோல தன்னையும் காப்பாற்ற வேண்டும் என்று மாணிக்கவாசகர் விண்ணப்பித்திருக்கின்றார். காரணம், இறைவன் வெண்ணீற்று மேனியன் அவ்வாறு வெண்ணீற்று மேனியனாக இருக்கின்றான் என்று குறிப்பதன் பொருள் ஆன்மாக்கள் வினை நீக்கம் பெறவேண்டும் என்பதற்காகவே அவன் வெண்ணீறணிகின்றான் என்றுணர்த்தலேயாகும். ஆதலால் குழந்தையின் அறியாமைக்குத் தாய் பொறுப்பேற்று ஈடுசெய்தல் போல தன்னுடைய அறியாமைக்கும் இறைவனே பொறுப்பேற்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். அறியாக் குழந்தையின் தவறைத் தாய் திருத்திப் பாதுகாப்பது போல பொய்யிலங்குகின்ற தன்னை இறைவன்தான் பாதுகாக்க வேண்டும் என்றும் சொல்லுகின்றார். ஒரு தாய் குழந்தைக்கு உவப்பான பொருள்களைக் குழந்தைகளிடத்துக் கொடுத்தும், அனுபவிக்கச் செய்தும், அழிவு வராமல், அனுபவம் இடையறாமல் பாதுகாத்து அனுபவிக்கச் செய்வது போல தனக்கு இறைவன் வழங்கிய திருவருளின்பத்தை இடையறாமல் அனுபவிக்கும்படி செய்து பாதுகாக்க வேண்டும் என்றும் விண்ணப்பிக்கின்றார். எவ்வளவு அழகான உண்மை!

(தொடரும்)

★

திருக்குறள் வடமொழி சாத்திரங்களின் வழிநூலா?

(தமிழாகரர். தெ. முருகசாமி)

25.6.2018 தினமலர் திருச்சிப் பதிப்பு நாளேட்டில் டாக்டர் இரா. நாகசாமி எழுதிய, "திருக்குறள் வடமொழி சாத்திரங்களின் வழி நூல்" என்ற கட்டுரை படித்தேன்.

எழுதிய கட்டுரையில் வள்ளுவர் பற்றிய வரலாற்றுச் செய்திகள் உண்மையல்ல என்ற கருத்து ஏற்புடையது.

ஆனால் திருக்குறள் அமைப்பும் கருத்தும் பற்றி எழுதிய அனைத்தும் ஏற்புடையன அல்ல.

இந்து சமயம் என்ற ஒன்றே இல்லாதபோது அதன் கோட்பாடுதான் குறள் என்றது தவறானது.

திருக்குறளுக்குப் பின்தோன்றிய மணிமேகலையில் குறிப்பிடும் பல சமயங்களில் இந்து சமயம் இல்லை. அது எங்கே யாரால் எப்போது தோற்றுவிக்கப்பட்டது? அதன் கடவுள் எது! இவையெல்லாம் புரியாத புதிராக உள்ளபோது எப்படி அது இதனொடு பொருந்தும்?

சமஸ்கிருதத்தில் திரிவர்க்கம் இருக்கலாம்? அவைதான் முப்பால் என்றால், சமஸ்கிருதம் எப்பொழுது தோன்றிய மொழி? எங்கு பேசப்பட்டது? தமிழின் பழம்பெரும் நூல்களிலும் அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருள்கள் பேசப்பட்டுள்ளன. எனவே சமஸ்கிருதத்திலிருந்து வள்ளுவர் எடுத்துக்கொள்ள தேவை இல்லை.

வேதத்தில் தர்மார்த்த காமமோட்சம் இருக்கலாம். ஆனால் அவை வையத்துள் வாழ்வாங்கு வாழும் தமிழ் நெறிக்கு முற்றிலும் மாறுபட்டவை.

மனுதர்மத்தின் கருத்தைக் குறளில் வலிந்து பொருத்துவதாகவே கட்டுரை உள்ளது.

தர்மசாத்திர நாலுநிலை வாழ்க்கைதான் வள்ளுவம் என்ற கருத்து ஏற்புடையதன்று. பிரம்மச்சர்ய மாணாக்க நிலைக்குத் திருக்குறளில் சான்று உண்டா?

இல்லறமும் துறவறமும் கிருஹஸ்தவானப் பரஸ்தம் இல்லை. தொல்காப்பியர் கூறும் கற்பியல் வாழ்வின் பயன் ஆகும் இவைகள்.

காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே

திருக்குறளின் கடவுள் வாழ்த்து என்ற பெயர் அட்சராப்பியாஸம் என்றிருந்தால் பொருந்தும் என நான் நினைக்கிறேன் - எனக் கட்டுரையாளர் தொடர்ந்த நான்கு அதிகாரங்களுக்கும் தம் கருத்தை ஏற்றிக் கூற முயற்சிப்பதால் பொருள் பொருத்தம் இல்லாததோடு கட்டுரையாளர்போல அவரவரும் அவரவர்களேற்பக் கூறுவதாக அமைந்தால் திருக்குறளின் பொதுமை என்னவாகும்?

பொருட்பால் முழுக்க முழுக்க அரசுபற்றிக் கூறுவது, குடும்பம் பற்றியதெல்லாம் அறத்துப்பால் கூறிவிட்ட பிறகு மீண்டும் அதுபற்றி சிந்தனையை அர்த்தசாத்திரமோ மனுதர்மமோ கூறலாம். ஆனால் குறளின் பொருட்பால் கூறவில்லை.

காமத்துப் பால் நாடக பாணியில் எழுதப்பட்டதே தவிர நாடகமே அன்று. அதற்கு நாடக மேடை எனக் கற்பிப்பது பொருந்தாது. அறம், பொருள் பற்றியதில் வள்ளுவர் கூற்றுக்கள் அமைவது போலல்லாமல் காமத்துப்பாலில் தலைவன் தலைவி என்ற இல்லறப் பாத்திர உரையாடல்களாகப் படைக்கப்பட்ட புதுமை, சங்க இலக்கியத் தமிழ் மரபைச் சார்ந்தது. அதனால் அதை நாட்டிய சாத்திரம் எனக் கூறுவது எந்தவகையிலும் பொருந்தாது.

மேலும் காமத்துப்பால் வாத்ஸ்யாயனரின் காமசாத்திரம் எனக் கூறுவது முற்றிலும் ஏற்புடையதன்று. இப்படி இட்டுக் கட்டிக் கூறுவது தமிழ்க் காதல் பற்றி முற்றிலும் உணராத கூற்றாகும் எனலாம். காமசாத்திர விரசம் வேறு. காமத்துப்பால் விவேகம் வேறு.

கீதையின் பொருத்தப்பாடு வள்ளுவத்தில் இருப்பதால் அது முழுக்க முழுக்க கீதையை வழிநூலாகக் கொண்டதாகாது. நால்வகை வர்ணாசிரமத்தைக் கூறும் கீதைக்கும் பிறப்பெக்கும் எல்லா உயிர்க்கும் என்ற குறள் நெறிக்கும் அடிப்படையிலேயே வேறுபாடுண்டு.

மேலும் எந்த ஒரு கருத்தும் இன்னொரு மொழியோடு பொருந்தலாமேயன்றி (APPLIEDTHEORY) முற்றிலுமாக ஏற்புடையதாக (APPLICABLE) தாகக் கொள்ள முடியாது.

மேலும் கூறினால் கீதையை வள்ளுவர் அறிந்திருக்கவே மாட்டார் எனலாம். ஏனெனில் கீதைபற்றி நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் எந்த ஆழ்வாரும் கூறவில்லை. ஏன்? எவ்வளவோ வைணவக் கதைகளைத் தெரிந்து கூறும் ஆழ்வார்களில் ஒருவர் கூடக் கூறவில்லை என்றால் அவர்களுக்குத் தெரியாததால் கூறவில்லை என்பதுதானே கருத்து. புனிதமான நூலைத் தெரிந்தும் புறக்கணிக்க வாய்ப்பில்லை. எனவே கீதை பற்றிய ஐயம் தெளிவுபடுத்தவேண்டிய ஒன்றாக உள்ளபோது வள்ளுவரோடு தொடர்புபடுத்துவது பொருத்தமேயன்று.

ஆக, "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி" எனப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் கருத்தைத்தான் கட்டுரையாளரோடு பொருத்திப் பார்க்கத் தோன்றுகிறது என்பது என் கருத்து.

நயம்பு அறிவுடை நம்பிக்கு
"பாரதி தமிழ்மணி" விருது

ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம் மகாகவி பாரதியாரின் 137வது பிறந்தநாள் விழாவை 02.02.2019இல் கொண்டாடியபோது, தமிழ்ப் பல்கலைக்கழக மேலாளர் துணைவேந்தர் ஔவை. நடராசன் அவர்கள் தலைமையில், தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப்பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் மாண்புமிகு. க. பாண்டியராஜன் அவர்கள் **நயம்பு. அறிவுடைநம்பியின்** தமிழ்ப் பணிகளைப் பாராட்டி "பாரதி தமிழ்மணி" என்னும் விருது வழங்கிச் சிறப்பித்தார்.

"மக்கள் சிந்தனை"யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றில் அமைந்துள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.

– ஆசிரியர்

ஒளி ஏற்றியவர்க்கு இருட்டில் விழா!

(கவிவேந்தர். கா. வேழவேந்தன்)

எத்தனையோ தோல்விகளை எதிர்த்து வென்றே
இவ்வுலகம் மேன்மைபெற மின்சா ரத்தை,
முத்தான வானொலியைத் திரைப் படத்தை
மூளைவள எடிசன்தான் ஆய்ந்தே கண்டார்!
பித்தனைப்போல் ஆராய்ச்சிக் கூடம் அன்றிப்
பிறிதொன்றைக் காணாத அவரைப் பார்த்து,
"இத்தினம்ஓர் விடுமுறைநாள்; ஓய்வுக் காக
இன்பஉலா செல்க!" என மனைவி சொன்னார்.

வழிஅனுப்பி வைத்தஅவர் வெளியில் சென்று
வரும்போது தொழிற்கூடம் திறந்திருக்க,
விழிதிகைத்தே உள்நுழைந்தார்; எடிசன் ஆங்கே
வினைப்பணியில் மும்முரமாய் இருக்கக்கேட்டார்;
"பழியாகக் கருதாதே! வீட்டை விட்ட
பாதங்கள் எனைஈங்கே கொணர்ந்த" தென்றார்!
"நிழல்கூட உமைவிட்டுப் பிரியும்; ஆய்வு
நெடுந்தாகம் பிரிவதெங்கே?" வியந்தார் மங்கை.

ஆயிரத்தின் ஐந்நூற்றைத் தாண்டி, நம்மை
அரியகண்டு பிடிப்புகளால் திகைக்க வைத்த
தூயவரின் தாயகமாம் அமெரிக் காஅத்
தோன்றலுக்கே நூற்றாண்டு விழாஎடுத்தார்;
நேயமிகும் அன்றிரவில் மின்துண்டிப்பால்
நெடியஇருள் சிலநிமிடம் கவ்வச் செய்தார்!
"பாய்ந்துவரும் மின்சக்தி ஒளியைத் தந்த
பயன்எடிசன் பிறந்தநாள் இன்றே!" என்றார்.

★

திருவெம்பாவை பற்றி தருமையதீன உரைச் சிந்தனை

(தருமையாதீனப் புலவர். தா. குருசாமி தேசிகர்)

"பாவைப் பாட்டு என்பது, கன்னிப்பெண்கள் நோன்பு மேற்கொண்டு வழிபடும் பாவை பற்றியது அன்று; அம்மானை, ஊசல், போல மகளிர் விளையாட்டுப் பாடலே என்பதும், அவ் ஆடலாவது நீராட்டு என்பதும், அந்நீராட்டை மார்கழி நீராட்டாக வரையறுத்தருளினர் – என்பதும், அதனால், இத்திருவெம்பாவையைத் தமக்கேயன்றி அந்நீராடு மகளிர்க்கும், உலகின் பிறர்க்கும் பயன்படுமாறு செய்தருளினார்? என்று தோற்றுவாய் கூறிய உரையாசிரியர், இனி வேறுபாடு உணர்த்துவது சிந்திக்கத்தக்கதாகும்.

"இவ்வாற்றால், திருவெம்பாவையில், வரும் மகளிராதல், இதனை அருளிச் செய்த மணிவாசகராதல் ஏனைச் சிவநெறி ஆசிரியராதல், இறைவனை உடம்பால் தழுவி இன்புறக் கருதினார் என்பதற்கு ஒரு தினைத்துணையேனும் இடமில்லை"

என்ற அரியதோர் உரைதந்த ஆசிரியர் அமரர் திரு. அருணையார் ஆய்வுச் சிந்தனை இதுவரைவந்த அறிஞர்கள் உரையில் காணமுடியாதனவாகும். தொடர் உரையும் காணத்தக்கது :

1. பெண்கள் பாவை நோன்பு உமையம்மையை நீர்க் கரையில் மணற்பாவை செய்து வழிபடுவது பற்றி திருவெம்பாவையில் குறிப்பே இல்லை என்பர். உரையாசிரியர். சிலர், அப்பாவையை முன்னிலைப்படுத்திப் பாடுவது தான் பாவைப் பாட்டு என்று உரைகூறுவதற்கு திருவெம்பாவையில் காணப்படவில்லை என்று குறிப்பும் தருவர்.

2. ஆண்டாள் திருப்பாவையாகிய வேறொரு பாவைப்பாட்டில் இது விளக்கமாகக் காணப்படுகிறது. அக்குறிப்பு திருவெம்பாவையில் காணப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

3. பாவைப்பாட்டு என்பது, பாவை நோன்பு பற்றியாதல், வழிபடப்படும் பாவை பற்றியாதல் வந்ததன்று; அன்றியும் சமண சமயத்தினரும் தம் கடவுள் பற்றிப் பாவை பாட்டுப் பாடினர் என்பது உரைக்குறிப்பால் தெரிவதால், உமைவழிபாடு அதனைக் கொண்டிலர். ஆதலின் "எம்பாவாய்" என்பது வழிபடப்படும் தெய்வப்பாவையை விளிப்பதாய், பொருள் தருமாயின், பின்னர்க் கூறப்படும் பொருள்கள், அத்தெய்வத்தைப் பற்றியாதல் வேண்டுமன்றி, வேறாதல் கூட, மையானும் அங்ஙனம் கூறுதல் பொருந்தாது.

4. பாவைப் பாட்டு என்பது, அம்மானை, ஊசல், பாட்டுகள்போல மகளிர் விளையாட்டுப் பாடலாகும். ஆனால் பாவைப்பாட்டு, இளமகளிர் தாம் நீராடுங்கால், பாவையொன்றினை நீராட்டி ஆடும் விளையாடும்போது, அப்பாவையை, "எம்பாவாய்" என அழைத்துப் பாடும் பாட்டே "பாவைப் பாட்டு" எனலாம். விளையாட்டு வகையிலும் "நீராடற்பாட்டு" எனலாம். எவ்வாறு ஆயினும் பாவையை விளித்துப் பாடுதல் பற்றி பாவைப் பாட்டு எனப்பட்டது. இவையெல்லாம் பாவை பாட்டுகள் யாவும் நீராடல் பற்றியே வருதலால் பெறப்படும். "ஏலோர்" என்பது மகளிர் அப்பாவையை விளிப்பதோர் "சொல்" ஆகும்.

5. கிருட்டின பாகவதம் கூறும் பாவை நோன்பு மாயோன் தேவி முதலிய பிற தெய்வங்களைப் பற்றியாகாது. உமையம்மையையே பற்றியதாக உள்ளது. சிவத்தையும், உமையையும் வாழ்த்துவதாகிய திருவெம்பாவைக்கு ஏலாது. செயல்வகையில் உமையம்மையைப் பற்றியதாயினும், கருத்துவகையில் கண்ணனைக் கணவனாக அடைவதையே பயனாகக் கொண்டமையின், அக்கருத்தில்லாத மகளிரைப் பற்றி வரும் திருவெம்பாவைக்குப் பொருத்தமின்று.

6. இறைவனைக் கணவனாகக் கருதுதல் மாயோன் நெறிக்குரியது : சிவநெறியில் அது காணப்படாதது. அதற்குக் காரணம் : இறை இன்பமும், இவ்வுடம்பு இல்லாவிடினும், ஒளிவுடம்பாய வேறோர் உடம்புகொண்டு நுகரப்படுவதே என்பது மாயோன் நெறியிற் காணப்படுவதற்கும், சிவநெறியிற் காணப்படாமைக்குக் காரணம், இறைவனுக்கும் உயிருக்கும் இடையே உடம்பு என்பது ஒன்று நிற்கும் நிலையதாயினும், அது இறைவனை நேரேதலைப்படுவது ஆகாமையால் பந்தமே ஆகும். அதனால் இடையீடு யாதுமின்றி உயிர் இறைநிறைவில் ஒன்றாய்க் கலந்து அவ்வின்பத்தில் அழுந்தி நிற்பதே வீடு - என்பது சிவநெறிக்கொள்கை என்பர்.

7. ஆண்டாள் வரலாற்றிலும், பாடலிலும் இறைவனைக் கணவனாகக் கொண்டு காதலித்தமை அறியப்படுதலாலும், காரைக்காலம்மையார் வரலாற்றிலும், பாடலிலும் அது கேட்கப்படாமையோடு, இறைவனை அவர், "அப்பா" என அழைத்தமையே கேட்கப்படுவதாலும் நன்கு புலனாகும் என்பர்.

8. காரைக்காலம்மையார் தாம் தசைப்பொதி உடம்பைச் சுமந்து நின்றது உலகியல் பற்றித் தம் கணவன் பொருட்டாகவே என்பதையும், அவ்வுடம்பு கணவனுக்கு ஆகாமை அறிந்த அப்பொழுதே அவர் இறைவனை வேண்டி, இறை அருளால் அவ்வுடம்பை உதறித் தள்ளிப் பேயுரு பெற்ற வரலாறும், இறைவனை அறிவினுள்ளே அறிவினாலறிந்த இன்புற்றிருந்த அம்மையின் ஞானத்திற்கும், எல்லை இல்லை.

அதனாலன்றோ ஞானத்தின் திருவுருவேயான ஞானசம்பந்தரும், அம்மை தலையால் நடந்த திருத்தலத்தை யான் காலால் மிதியேன்? என்று அஞ்சு ஆலங்காட்டினுட் செல்லாது புறத்தே தங்கியிருந்ததும், இறைவனும் அவரை "வா" என்று உள்ளே அழையாது, அவரிருந்த இடத்தில் தானே சென்று பாடச்செய்து, அப்பாடலைக் கேட்டதும் முதலிய செய்திகளால், இறையின்பத்தை நுகர உடம்பு வேண்டப்படுவதன்று என்பதோடு, அஃது அதற்குத் தடையுமாம் என்பதே சிவநெறிக் கொள்கை என்று உரைநுட்பம் கூறப்படுவது அறியற்பாலது.

9. இறை இன்பம் உடம்புகொண்டே நுகரப்படுவது எனவும், இறைவன் சிறப்புடைய ஓர் ஆடவன் (புருடோத்தமன்) எனவும் கொள்ளுதலால், அவனது இன்பத்தை நுகரும் அடியார்களுள் ஆடவரினும், மகளிரே பெரிதும் தகுதியுடையர் என்பர், மாயோன் நெறியினர்.

10. சிவநெறியின் கண் அக்கொள்கையின்மையானும், ஆடவர், மகளிர் என்னும் வேறுபாடு உடம்பின்கண்ணதன்றி, உயிரின் கண் இன்மையானும்,, இறையின்பத்தை நுகர பால்வேறுபாடும் இல்லை என்பது சிவநெறியாம் என்பர்.

11. சமண் சமயத்தினர், பெண்டிர்க்கு முத்திப்பேறு இல்லை என்பர்; இறைவனோடு அவன் அடியாரிடை நாயக நாயகி பாவம் கூறுவார், ஆடவர்க்கு முத்திப்பேறு இல்லை என்பர். இவ்விரண்டும் உயிரியல்பையும், உடம்பியல்பையும் பகுத்துணரும் உணர்வினர் முன்னர் நகையைத் தோற்றுவிக்கும் என்பர் உரைகாரர்.

12. முடிவாக, மணிவாசகரது திருவெம்பாவைக் கருத்தினைக் கொண்டும், ஏனைச் சிவநெறிக்குரிய நூல்களைக் கொண்டும், நோக்கியே சைவ நுட்பம் தெரியவேண்டும். பிறநூல் கொண்டு நோக்குதல் கூடாது. இதனாலே திருவெம்பாவையிற் கூற்று நிகழ்த்தும் மகளிரோ, மணிவாசகரோ, பிற ஆசிரியர்களோ, இறைவனைக் கணவனாகவும் தம்மை மனைவியாகவும், கருதி நின்றார் என்பதற்கும் எள்ளளவும் சான்றுகளை இல்லை என்பது தருமையாதீன உரையாசிரியர் மகாவித்துவான் திரு. அருணைவடிவேல் முதலியார் பதிவுசெய்த அரிய செய்திகளாகும்.

ஆதலின் திருவெம்பாவை கடவுள் பொருளாகப் பட்டது என்பதால், சிவபிரானுக்குரிய திருவாதிரை விழா முடிய பத்து நாட்கள் ஓதப்படும் வழக்கம் சிவாலயத்தில் உள்ளதை இன்றும் காணலாம். அப்பத்து நாட்களிலும் திருமுறைகள் - ஓதப்படுவதில்லை என்பதும், இம்மாதம் முழுவதும் சிவத்தைத் தேடி வணங்கும், பீடுடைய மாதம் என்பதும் சைவமரபில் உள்ளது என்பதும், இதனைச் சைவாதீனங்களும், சிவாலயங்களும் மரபுவழி பேணி வருகின்றன என்பதையும் அறிந்து மகிழலாம்.

மக்கள் சிந்தனை

உரிமை - பதிப்பு அறிக்கை

1.	இதழின் பெயர்	:	மக்கள் சிந்தனை
2.	மொழி	:	தமிழ்
3.	வெளியீடு	:	திங்கள் இதழ்
4.	வெளியீடு இடம்	:	குன்றக்குடி - 630 206
5.	ஆசிரியர் }	:	**மரு. பரமகுரு**
	உரிமை	:	திருவண்ணாமலை ஆதீனம்,குன்றக்குடி
6.	பதிப்பாளர் }	:	**பழ. பாண்டித்துரை**
	அச்சகம்	:	சண்முகநாதன் அச்சகம், மேலரதவீதி, குன்றக்குடி.
7.	பதிவு	:	செய்தி இதழ்

மேற்கண்ட விவரம் யாவும் உண்மை என்றும், நம்பத் தகுந்தவை என்றும் உறுதி கூறுகிறேன்.

நாள் : 12.3.2018 **மரு. பரமகுரு**

தேசம் காக்க உயிர்நீத்த தியாக தீபங்களுக்கு வீர வணக்கம்

காஷ்மீர், புல்வாமா பகுதியில் நம் சி.ஆர்.பி.எப். வீரர்கள் நாற்பது பேர்கள் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் பயங்கரவாதத் தாக்குதலால் வீரமரணம் அடைந்திருப்பது இந்திய நாட்டு மக்களை அதிர்ச்சியும் ஆவேசமும் கொள்ளச் செய்திருக்கிறது. ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு.

நம் தேசத்தைக் காக்க உயிர்நீத்த அந்த தியாக தீபங்களான மாவீரர்களுக்கு "மக்கள் சிந்தனை" இதழ் தலைதாழ்த்தி வீரவணக்கம் செய்கிறது.

- ஆசிரியர்

கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்பட வேண்டும்

புதுவைத் தமிழ்ச் சங்கத்தின் பொன்விழா தமிழ் மாநாடு புதுச்சேரி லாசுப்பேட்டை விவேகானந்தா மேல்நிலைப் பள்ளியில் (16.2.2019) சனிக்கிழமை தொடங்கியது. விழாவில் குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார் பேசியதாவது :

எழுத்துக்கும், சொல்லுக்கும் மட்டுமல்ல; வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தது தமிழ் மொழி. பண்டைய காலத்தில் மன்னர்கள் தமிழைப் போற்றினர். 7-ஆம் நூற்றாண்டில் "வாழ்வாங்கு வாழ்வதற்கே வாழ்க்கை" என்ற தமிழ்நெறியை நிலைநிறுத்தும் முயற்சியில் திருஞானசம்பந்தர் ஈடுபட்டார்.

சமயத்தையும், பண்பாட்டையும் மொழி தாங்கிப் பிடித்தது என்ற பெருமை தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு. 20-ஆம் நூற்றாண்டில் பாரதி என்ற கவிக்குயில் கூவவில்லை எனில், இந்தியாவுக்கு விடுதலை கிடைத்திருக்குமா என்பது சந்தேகம்தான். அந்த வகையில், நாட்டு விடுதலையைப் பெற்றுத் தந்த பெருமையும் தமிழ் மொழிக்கு உண்டு.

இந்த மண்ணில் பிறந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தமிழைக் கற்றால் துன்பங்கள் நீங்கி சுகம் உண்டாகும் என்றார். அறிவின் அடையாளம் பட்டங்களைப் பெறுவதல்ல. நூல்களை எழுதிக் குவிப்பதல்ல. மனித குலத்துக்கு வரும் துன்பங்களை எது எதிர்கொள்கிறதோ அதன் பெயரே அறிவு என நவீன கருவிகள் இல்லாத காலத்திலேயே அறிவு வெள்ளத்தைப் பாய்ச்சியவர் திருவள்ளுவர்.

மாற்றுச் சமயத்தைப் பரப்ப வெளிநாட்டிலிருந்து வந்த ஜி.யு. போப், திருவாசகத்தின் தீந்தமிழால் ஈர்க்கப்பட்டார். அத்தகைய தமிழ், கோயில்களில் முழங்கப்பட வேண்டும். கடந்த 1962-இல் குன்றக்குடி மகாசந்நிதான அடிகளார், அப்போதைய முதல்வர் பக்தவச்சலம் முன்னிலையில், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் தமிழில் அர்ச்சனையைத் தொடங்கி வைத்தார். அன்று தொடங்கப்பட்ட தமிழ் அர்ச்சனை உலகம் முழுவதும் ஒலிக்கப்பட வேண்டும்.

கல்வியானது மருத்துவர், பொறியாளர், வழக்குரைஞர், அரசியல் தலைவர் போன்றோரை உருவாக்குவதைத் தாண்டி, முதலில் மனிதர்களை உருவாக்க வேண்டும். அந்தப் பாதையை நோக்கி நமது கல்வி உலகம் முழுக்கப் பயணிக்க வேண்டும். அதற்கு புதுவைத் தமிழ்ச் சங்கம் வழிகாட்டும். பல்வேறு பிரச்னைகளுக்கு இடையே தமிழ்ச்சங்கம் தனது கடமையைச் செய்வதற்கு நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் அவர்.

நன்றி : தினமணி - மதுரை 17.2.2019

ஞானாமிர்த சாரம்

குன்றக்குடியில் 29.12.1939இல் நடைபெற்ற
சைவசித்தாந்த மகா சமாசக் கருத்தரங்கச் சொற்பொழிவு

(உரைவேந்தர். ஔவை. துரைசாமி பிள்ளை)

"ஞானாமிர்த சாரம்" என்னும் பெரும் பொருள் பற்றி அடியேனைப் பேசுமாறு எனக்குக் கட்டளையிட்டவர் நமது சமாசக் காரியதரிசியாகிய சைவத்திரு. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களே ஆவர். அவர்கள் செய்துவரும் சைவத் தொண்டும், சமயத் தொண்டும் தமிழ்நாடு நன்கறிந்த செய்தியாகும். அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றும் இல்லையாயினும், அவர்கள் பெருநலம் எய்திப் பல்லாண்டு வாழ ஆண்டவனை வழிபடுவதொன்றையே உடையோம். என் போன்றோர். அதனோடு அவர் இடும் பணிகளை ஆற்றவேண்டும் என்னும் கடமையுடையவராவார். அதனால் என் பேச்சில் நலம் உண்டாகுமாயின் அதனை அவர்களுக்கே உரிமை செய்து விடுமாறு முதற்கண் வேண்டிக் கொள்ளுகிறேன்.

சென்ற சில ஆண்டுகளாக, யான் ஞானாமிர்த நூலுக்கு விளக்கவுரை ஒன்று வகுத்து நம் சித்தாந்தத்தின் வாயிலாக வெளியிட்டு வருகின்றேன். சுமார் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் இந்த ஞானாமிர்த நூலைப் பதிப்பித்தனர். இதனை ஆராய்ந்து தந்த பெரியார் சேற்றூர் - திரு. சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள் இத்துறையில் பட்ட துன்பத்துக்கு அளவில்லை என்பது அவர் எழுதியுள்ள முன்னுரையால் விளங்குகின்றது. தற்செயலாக எங்கள் வீட்டின் பழைய ஏட்டுப் பிரதி ஒன்று சில ஆண்டுகளுக்கு முன் கிடைக்கப் பெற்றது. அதனைப் பார்த்தபோது பாட்டுக்கள் பலவும் செவ்வையாகவே காணப்பட்டன. ஆனால் அவற்றில் இலக்கணக் குறிப்பும், உரைக் குறிப்பும், பாடவேறுபாடுகளும் இருப்பக் கண்டேன். அவ்வுரைக்கும், அச்சாகி வெளிவந்துள்ள உரைக்கும் மிக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒன்று கூறுகிறேன்; "யாளி, கூவல் தூண்டும் ஆதப் புலைச்சி, காதற்காசனியாகி, மேதினி இன்னிசை எழுவர்ப் பயந்தோள் ஈண்டே" (ஞானா - 40) என்பதன் உரையில் எழுவர் என்றது கபிலர் அதிகமான் முதலிய எழுவர் என அச்சாகியுள்ள உரை கூறுகிறது; ஏட்டுப் பிரதியில் உள்ள குறிப்புரை. "எழுவர் என்றது முனிவர் எழுவரை" என்று கூறுகின்றது. அதனால், இவ் வேறுபாடுகளை ஆராய்ந்து விளக்கவுரை ஒன்று எழுதி வெளியிட விரும்பி நமது சமாசக் காரியதரிசி அவர்களுக்குத் தெரிவித்தேன். அவர்கள், அவ்வாறு வெளியிடுவது நன்றே என உரைத்தார்கள். யானும் அவ்வண்ணமே எழுதியுள்ள விளக்கவுரையைச் சென்ற சில ஆண்டுகளாக நம் சித்தாந்தத்தில் வெளியிட்டு வரலானேன். சென்ற சில மாதங்களுக்குமுன் ஓர் எண்ணம் தோன்றியது.

"இதனை இவ்வாறே செய்துவரின் காலம் நெடிது பிடிக்கும்; முழுதும் நன்கு எழுதித் தனி நூலாக வெளியிடுவதே தக்கது" என எண்ணி வேண்டுவன செய்யத் தொடங்கினேன். அதனால், நம் காரியதரிசியவர்கள் யான் இதனைக் கைவிட்டுவிட்டதாகக் கருதலானார்கள். தில்லைத் தமிழ்க் கழக ஆண்டு விழாவிற்கு என்னை அழைத்த காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொருள் நூல் ஆசிரியரும், என் இனிய தோழருமாகிய உயர்திரு. S.K. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் என்னை இந்த ஞானாமிர்தத்தைப் பற்றியே பேசவேண்டும் என்றார்கள். அப்போது செவ்வியபடி எடுப்பதற்காகப் பிரதிகளை வேற்றூருக்கு அனுப்பியிருந்தமையால் முடியாது போயிற்று. போயினும், இம்முறை குன்றக்குடி முருகன் திருமுன் அது வெளிப்பட வேண்டும் என்பது திருவருள் முடிபு போலும் என்று எண்ணி, என் மனமொழிகளால் ஆண்டவனை வேண்டுகின்றேன். இது குறித்து என்னை ஊக்கிய திரு. கோவிந்தசாமிப் பிள்ளை M.A., அவர்களுக்கும் என் பணிவான நன்றி செலுத்துகிறேன்.

பெரியோர்களே, ஞானாமிர்தம் என்கிறபோதே, குற்றமோகோதோ ஏதுமில்லாத அமுதமாகும் இது என்பது விளங்கும். குற்றமும் கோதும் உள்ளதாயின். அதனை வடித்துச் சாரம் காண்பது இயல்பாகும். ஆனால், இங்கு சாரம் என்றொரு சொல்லைப் பெய்து நம் காரியதரிசியார் குறித்துள்ளார்கள். வேண்டாத ஒரு சொல்லைப் பெய்து கூறுவது வேறொரு பொருளைக் கருதுமிடத்து உண்டு. அதனால், ஞானாமிர்தம் என்பது ஒரு செவ்விய தமிழ்ச் சைவப் பெருநூல் என்றும், அதனுடைய சுருங்கிய கருப்பொருள்தான் அடியேனால் பேசப்படவேண்டும் என்றும் சமாசம் கட்டளையிட்டது என்று கருதுகின்றேன்.

அமுதம் என்று சொல்லுகிறபோதே, அதன் ஓசை இரண்டு செய்திகளை நம் நினைவிற்குக் கொண்டுவருகிறது. ஒன்று தேவருண்ட சாவா மருந்து என்பது; மற்றொன்று பண்டு. அது குறித்துக் கடல் கடையப்பட்ட செய்தி. சாவா மருந்து என்பது சாதலை நீக்க வந்த - உயிர் உடலை விட்டு நீங்குவதாகிய சாதலை நீக்க வந்த அமுதமாகும். ஆகவே, உடலின் நீங்காது உயிர் நெடிது நிற்றற்குதவும் மருந்தாகிய அந்த அமுதத்தினும் இந்த அமுதம் வேறுபட்டது. உயிரை உடலின் நீக்குவோரை நண்பர் என்றும் ஒன்றுபடுத்துவோரைப் பகைவர் என்றும் கூறும் பான்மை உடையது இந்த ஞானாமிர்தம்.

"ஈன்றோர் பகைஞர் கீழ்ந்தோர் நட்பே
அருஞ்சிறை விடுநரின், அருஞ்சிறை இடுநரின்
யார்கொல் உறுதி யோரே"

என்று இது கூறுகின்றது. ஆனால் கடைந்து கொள்ளப்படும் செய்தியை நோக்கின், இந்நூல் அதனைத் தழுவி,

ஆகம மத்தின், அருளின கோலத்து
ஆசிரி யமலன் பாத பங்கயப்
போதொளி யிலகப் புனைந்து, மாதவன்
அருள் உபதேச அரும்பெறல் நோன்ஞாண்
மதிமாத் தடக்கைக் கதுமெனப் பூட்டி
முறுக வாங்க மறுகுபு கலுழந்து
அச்சா ணாழி ஏற்பட எழுதலின்
ஞானா மிருதம் என்ப
ஆனாச் செவ்வி மாநூற் பெயரே" – ஞனா – 3

என்கின்றது.

இனி, இந்நூலாசிரியர் வாகீச முனிவர் என்பவர், இவர் சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் கோடலம்பாகை என்னுமிடத்தில் இருந்த பரமானந்த முனிவரிடம் சித்தாந்த சைவ மெய்நெறியை உணர்ந்தவர். இச்செய்தி, இந்நூலில்,

பாடல் சான்ற பல்புகழ் நிறீஇ
வாடாத் துப்பின் கோட லாதி
அருளா பரணன் அறத்தின் வேலி
அருள் மொழி திருமொழி போல" – ஞனா – 28

என வருவதாலும்.

இருள்நெறி மாற்றித்தன் தாணிழல்இன்ப மெனக்களித்தோன்
அருள்மொழித்தேவன் நற்கோடலம் பாகை யதிபனெங்கோன்
திருநெறி காவலன் சைவ சிகாமணி சில்சமய
மருணெறி மாற்ற வரும்பர மானந்த மாமணியே"

என இவர் பாடியதாகக் கூறப்படும் தனிச்செய்யுளாலும் தெரிகின்றது. வேறு குறிப்புகள் மிகுதியாகக் கிடைத்தில. கிடைத்துள்ளவற்றைக் கொண்டு பின்னா் ஆராய்ச்சி செய்யக் கருதி இதுபோது நிறுத்திக் கொண்டிருக்கின்றேன். ஆனால், இவர் பாடிய பாட்டுக்களை எங்கள் சைவத் தனிமுதலாகிய சிவஞான முனிவர் யாம் செய்த தவப்பயனாகத் தந்துள்ள மாபாடியத்தும், பிறாண்டும் பொன்னே போற் போற்றி ஆண்டிருக்கின்றார் எனின், இப்பாட்டுக்களின் நலங்கள் எத்துணைச் சிறப்புடையது என்பது யாவர்க்கும் நன்கு விளங்கும். பெரியோர்களே, இனி யான் பேசவேண்டியது "ஞானாமிர்த சாரமே" யாதலின், இனியும் இவற்றைப் பற்றிக் கூறிச் செல்வது மற்றொன்று விரித்தல் ஆகும். அதனால் இனி யான் பொருளுக்கு வருகின்றேன்.

(தொடரும்)

வான்வெளி மாவீரன் அபிநந்தனை
வாழ்த்தி வணங்கி வரவேற்கிறோம்!



வான்வெளி வீரனே!
அபிநந்தனே!
பாரத அன்னையின்
தவப்புதல்வனே!
பகைநாட் டினுக்குளும்
பாய்ந்து மீண்டெழுந்த
சிங்கமே வாழ்க!
வாழ்கபல் லாண்டே!

தமிழாகரர் தெ. முருகசாமி அவர்களின் சிலம்பில் தொல்காப்பியப் பதிவு கட்டுரை தொடர் அடுத்த இதழில் வெளிவரும். – ஆசிரியர்

உலகத் திருக்குறள் பேரவை சென்னைக் கிளைத் தலைவர்

எஸ்.டி. இராசதேவன் காலமானார்

உலகத் திருக்குறள் பேரவை சென்னைக் கிளையின் தலைவர் முனைவர்.எஸ்.டி.இராசதேவன் அவர்கள் 3.3.2019 அன்று காலமானார் என்பதறிந்து "மக்கள் சிந்தனை" வருந்துகிறது.

இப்பெருமகனாரின் மறைவு உலகத் திருக்குறள் பேரவைக்குப் பேரிழப்பாகும். அவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அப்பெருமகனாரின் நல்லுயிர் இறைவன் திருவடி நிழலில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது. – ஆசிரியர்

சிறப்பாசிரியருக்கு கடிதம்....

- ஆனந்த விகடன் வாங்கிவிட்டால்
- அன்பே தவத்தை படிக்க மனம் துடிக்கும்!
- அப்பா காவி உடைக்குள் இருப்பது உள்ளமா!
- அன்றி கடல் மடை திறந்த தமிழ் வெள்ளமா!
- குன்றக்குடி அடைந்திருப்பது ஆதீனத்தையா!
- குவலயமே போற்றி நிற்கும் நான்கு வேதத்தையா!
- பிறவி எந்தனுக்கு மறுபடியும் வேண்டுமாயின் – நின்
- பேனாவாய் புவிமீது யான் பிறக்க வேண்டும்!
- கம்பனும் – வள்ளுவனும் இன்றிருந்தால் நினைக்காணை
- கால் கடுக்க குன்றக்குடி வரநினைப்பார்!
- சிறுகூடற்பட்டி கண்ணதாசனால் புகழடைந்தது!
- செந்தமிழும் அவர்நாவில் நடம்புரிந்தது!
- எட்டயபுரத்து பாரதியும் தேசிய கவிஞரானார்!
- எதுகை – மோனையுடன் பலகவிதை தந்தார்!
- பொன்னம்பலமே நீவிர் அவரின் மறுவடிவம்!
- பூந்தமிழும் தவழ்ந்து வந்து வாழ்த்துதய்யா!
- நானொன்றும் புலவனில்லை – கவிஞனில்லை
- நற்றமிழை நண்குணர்ந்த மனிதனில்லை – நின்
- நாவுரைத்தது நமது தாய்மொழி – நாங்களென்றும்
- நயமுடனே உனது புகழ்பாடி நிற்போம்!
- பொன்னம்பலத்தை புகழுடனே உயர்த்திடவே!
- பூந்தமிழை போற்றிடுவோம் தாள்பணிந்து
- எந்நாளும் நினது மனம் தமிழைப் பேசும்!
- எழுத்துக்களில் கருத்துக்களாய் நடைபயிலும்!
- ஆதீனமே என்றும் வாழ்க நலமுடனே! இந்த
- அகிலமே போற்றும்படி செழித்து வாழ்க!!

– கவிஞர். துரை. வீரப்பன்
செவல்பட்டி

"விகடனில் தங்களின் அன்பே தவம்" என்ற அடர்த்திமிக்க அறிவார்ந்த கட்டுரைகளை வாசித்து வருகிறேன்.

ஒவ்வொரு கட்டுரையையும் அமைதியான முறையில் ஆழமான நடையில் நேர்த்தியான கருத்துக்களோடு மனங்களை அறவயப்படுத்தும் வண்ணம் படைத்து வருகிறீர்கள்.

நற்பண்புகள் மீதான வேட்கையைத் தூண்டும் தூண்டுகோல்களாக அக்கட்டுரைகள் துலங்குகின்றன.

கட்டுரையினூடே சிறு சிறு குட்டிக் கதைகளாகச் சொல்லப்படும் ஆன்மிகக் கதைகளும், வரலாற்றுக் கதைகளும், நீதிக் கதைகளும் கட்டுரைக்குச் சுவை சேர்க்கின்றன.

மதநல்லிணக்கத்தின் மனச்சான்றாகத் திருக்குர்ஆன், விவிலியம் சொல்லும் கருத்துக்களையும் ஆங்காங்கே தாங்கள் தூவிச் செல்வது இக்கட்டுரைகள் ஒரு சாராருக்கன்று அனைவருக்குமானது என்ற நோக்கைத் தெளிவுபடுத்துகின்றன.

பொருத்தமான மேற்கோள்களும் பாடல்களும் திருக்குறள்களும் வாசகனின் இலக்கிய அறிவை மேம்படுத்தும் வண்ணம் திகழ்கின்றன.
"நம் கண்கள் பார்க்கக் கூடாதவையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்றன. காதுகள் கேட்கக் கூடாதவையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கின்றன. நாவோ, தேவையில்லாதவையெல்லாம் ருசி பார்த்துக் கொண்டிருக்கிறது. இப்படி ஐம்பொறிகளும் ஆபத்தை அழைத்துக் கொண்டிருக்கும்போது எப்படி நாம் பக்குவப்படுவோம்" இன்றைய நம் நடப்பியல் சமூகம் தெளிவுபெறுவதற்கு நெஞ்சில் தைக்கும்படி இதைவிடவும் ரத்தினச் சுருக்கமாக எவராலும் சொல்லிவிட முடியாது.

விழிப்புணர்ச்சியும், புத்துணர்ச்சியும் ஊட்டும் வகையில் படைக்கப்படும் இக்கட்டுரைத் தொடர். தமிழ் மக்களுக்குப் புதிய சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்த உதவும் என்று நம்புகிறேன்.

– கவிஞர். வைரமுத்து

"தைத் திங்கள் பிறந்த இந்த நாளின் புலர்காலைப் பொழுதில் அடிகள் பெருந்தகையின் ஆசியுரை என்னும் பொங்கல் திருநாள் நல்லுரையை வானொலியில் கேட்டு மகிழ்ந்தேன்.

இந்த மகிழ்ச்சி குன்றக்குடி ஆதீனம் வழக்கமாகத் தந்தருளும் பொங்கல் சீராக இருந்தது.

மனத்தின் குப்பைகளை அகற்றல் போகி என்றும்,

உழவின் முதன்மைக்குத் தைம் முதல்நாள் பொங்கல் என்றும்

மனிதர்களோடு இணைந்த ஆநிரைகள் பராமரிப்பு மாட்டுப் பொங்கல் என்றும் உணர்த்தியருளிய ஆசியுரை அதி அற்புதமாக இருந்தது.

மண்ணையும் மனிதரையும் பிரிக்க முடியாத விழாவே பொங்கல் என்ற மையக்கருத்து பொங்கல் இனிப்பாய் இருந்தது.

– அருளுரை கேட்ட மகிழ்வைப் பரிமாறும் பணிவுள்ள,

தெ. முருகசாமி

அன்புதான் மனித சமுதாயத்தை மேம்படுத்தும் என்ற உய்விக்கும் சிந்தனையின் வெளிப்பாடே "அன்பே தவம்" என்ற தலைப்பு என்று கருதுகிறேன்.

"அன்பே தவம்" தொடரில் தொடர்ந்து வரும் சமுதாயக் கருத்துக்களை தங்கள் திருவுளத்தில் சுரக்கும் அன்பின் ஊற்றாகவே நான் அறிகிறேன்

– ஆர்.கே. சண்முகம், சேலம்

தி.பி. 2049 புரட்டாசி மார்கழி மக்கள் சிந்தனை இதழில் சமூகம் கஜாபுயலின் கோரத் தாண்டவத் துயர் துடைப்புப் பணியைப் பற்றி அறிந்தேன். அப்போது சமூகத்தின் இன்றைய துயர் துடைப்பு பணிகளும், பரிபூரணமாக இருந்து அருள்பாலிக்கும் குன்றைக் குருமகா சந்நிதானம் அவர்களின் துயர் துடைப்பு பணிகளும் நினைவுக்கு ளவந்தன.

மக்களின் மனநிலைபற்றிய ஐ.நா. யுனெஸ்கோ நிறுவனத்தின் "எலிகள் பற்றிய ஆய்வு முடிவு" மிகமிகத் துல்லியமாக மக்களின் நடைமுறையைக் காட்டுகிறது.

மனஅமைதி புறச்சூழலில் இல்லை அவரவர் மனநிலை பற்றியது என்ற ஓவியப்போட்டி முடிவு மிகமிகச் சரியான உளவியல் முடிவினை ஒட்டியது.

வணக்கத்திற்குரிய பேரூர் அடிகள் பற்றிய அருமை நண்பர் பரமகுரு அவர்களின் வணக்கக் கட்டுரை "அடிகளின் வாழ்வு" இருந்தனை இருந்தபடி எடுத்துக் காட்டுவதாக அமைந்து மனம் தொட்டது.

நம் திருக்கூட்டத்தின் மூத்த திருத்தொண்டர் தூத்துக்குடி திரு.தரும. இராமச்சந்திரன் அவர்களின் இழப்பு ஒரு பேரிழப்பு. அனுபவத்தில் கண்டது.

நம் பரமகுரு அவர்கள் முழுநலத்துடன் நமது இதழ் தொடர்ந்து வெளிவரத் திருவருள் அருள்பாலிக்கப் பெருமானை வேண்டுகிறேன்.

– க.கதிரேசன், பூவாளூர்.

தமிழறிஞர் க.ப. அறவாணன் மறைவு



தமிழகத்தின் தலைசிறந்த தமிழறிஞருள் ஒருவரும் நம் குன்றக்குடி ஆதீனத்தின் 45-ஆவது குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார், 46ஆவது குருமகாசந்நிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் இருவரிடமும் ஆழ்ந்த அன்புடையவருமான பேராசிரியர் முனைவர். திரு.க.ப. அறவாணன் அவர்கள் 23.12.2018 அன்று மறைந்துவிட்டார். இச்செய்தியறிந்து "மக்கள் சிந்தனை" மிகுந்த வேதனையடைகிறது.

இந்த அறிஞர் தவத்திரு குன்றக்குடி அடிகள் பெருமானிடத்திலும் அவர்களின் வழிகாட்டலிலும் தொடங்கப்பெற்ற சுதேசி அறிவியல் இயக்கம், தமிழக அறிவியல் பேரவை "அறிக அறிவியல்" இதழ்ப் பணிகளில் ஆர்வத்துடன் பங்கெடுத்துப் பணி செய்தவர்.

குன்றக்குடி ஆதீனத்தால் பறம்புமலை (பிரான்மலை)யில் நடக்கும் வள்ளல் பாரி விழாவில் "நூலறி புலவர்" பட்டம் வழங்கப் பெற்ற அறிஞர். அறிவியலில் பலரை உருவாக்கிய பேரறிஞர் -இவர்தம் மறைவு தமிழுக்கும் தமிழ் ஆய்வுலகத்துக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இப்பெருமகனாரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் இவர்தம் துணைவியார் தாயம்மாள் அவர்களும் அவர்தம் குடும்பத்தினருக்கும் தமிழ் அன்பர்கள், நண்பர்களுக்கும் மக்கள் சிந்தனை ஆழ்ந்த இரங்கலைப் புலப்படுத்திக் கொள்கிறது. அவர்தம் நல்லுயிர் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது. – ஆசிரியர்

கோபிசெட்டிபாளையம்
உலகத் திருக்குறள் பேரவை வட்டக் கிளைச் செயலாளர்
புலவர். அர. திருநாவுக்கரசு அவர்கள் அச்சிட்டுப் பலருக்கும் வழங்கிய

பொங்கல் – திருவள்ளுவர் திருநாள் வாழ்த்து

புத்தாண்டு பிறக்கிறது, தைப்பொங்கல் வருகிறது;
எத்திசையும் புகழ்மணக்கும் வள்ளுவர் நாள் மலர்கிறது;
நாட்டுக்கே உணவளிக்கும் உழவர் நாள் காணுகின்றோம் – இக்
கூட்டுத்திருவிழாவிற்குக் குவலயத்தில் இணையேது?
தன்முனைப்பு, காழ்ப்புணர்வு, சாதிமத வெறிகள்
வன்முறையின் பேய்க்கூத்து, வகை வகையாய்ச் சுரண்டல் முறைகள்
இத்தனையும் அழித்தொழித்து, இன்பத் திருநாட்டில்
ஒத்து மகிழ்ந்திடவே உவகையுடன் வாழ்த்துகின்றோம்.
பொங்கலோ பொங்கல்!! பொங்கி மகிழ்ந்திடுவோம்!!!

– மக்கள் சிந்தனை இவர் பணியைப் பாராட்டி வெளியிடுகிறது. (ஆசிரியர்)

தூத்துக்குடியில் திருக்குறள் பலகைக்கு மாலை அணிவித்து வழிபாடு நடைபெற்றது

உலகப் பொதுமறை திருக்குறளைத் தந்த திருவள்ளுவரின் 2050 ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு உலகத்திருக்குறள் பேரவை, தூத்துக்குடி மாவட்டக் கிளையின் சார்பில் தூத்துக்குடி சி.எம்.மேனிலைப்பள்ளி, தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றம் முன்பு நிறுவப்பட்டுள்ள திருக்குறள் பலகைக்கு மாலை அணிவித்து வழிபாடு செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் உலகத் திருக்குறள் பேரவை, தூத்துக்குடி மாவட்டக் கிளையின் செயலாளர் முத்துநகர் மோ.அன்பழகன், பணிநிறைவு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், தென்மண்டலக் கருவூல அலுவலர் (மதுரை) து. கணேசன், திருக்குறள் அறிவுச்செல்வம், கவிஞர். இளமுருகு, கருவூல அலுவலர் சங்கரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டர்.

– முத்துநகர். மோ. அன்பழகன்

உ



குன்றக்குடி

அருள்தரு சண்முகநாதப்பெருமான் திருக்கோயில்

பங்குனி உத்திரப் பெருந்திருவிழா

திருவள்ளுவராண்டு 2050 மாசி 28 முதல் பங்குனி 7 வரை)

12.3.2019 முதல் 21.3.2019 வரை

முக்கிய நிகழ்ச்சிகள்

துர்முகி	ஆங்கிலத் தேதி	திரு நாள்	வாகனம் சிறப்பு வகை
மாசி28	12.3.2019 செவ்வாய்	1	கொடியேற்றம்
மாசி 29	13.3.2019 புதன்	2	வெள்ளிக்கேடகம்
மாசி 30	14.4.2019 வியாழன்	3	வெள்ளிக்கேடகம்
பங்குனி 1	15.3.2019 வெள்ளி	4	வெள்ளிக்கேடகம்
பங்குனி 2	16.3.2019 சனி	5	அருள்மிகு வள்ளிநாயகி திருமணம். பூப்பல்லக்கு
பங்குனி 3	17.3.2019 ஞாயிறு	6	ருத்ராட்சக் கேடகம்
பங்குனி 4	18.3.2019 திங்கள்	7	தங்கரதம்
பங்குனி5	19.3.2019 செவ்வாய்	8	தெப்பம், வெள்ளிரதம்
பங்குனி 6	20.3.2019 புதன்	9	திருத்தேர்
பங்குனி 7	21.3.2019 வியாழன்	10	உத்திரம், தீர்த்தவிழா

10ஆம் திருநாள் அக்கினிக் காவடி, பறவைக் காவடி முதலியவை பார்க்கத்தக்கவை.

குன்றக்குடி வருக! குமரன் அருள்பெறுக!

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி

மக்கள் சிந்தனை

குன்றக்குடி – 630 206

சிவகங்கை மாவட்டம்

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது
பழநி
பரிமள விலாஸ்
S.சித்தநாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்
வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தநாதன் சன்ஸ்
அடிவாரம், பழநி - 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-Jan - March 2019 Date of Publication 15-03-2019
Price Rs. 8-00



02-02-2019 அன்று திருச்சி பாரத மிகு மின் நிலைய அலுவலர் குடியிருப்பில் உள்ள கைலாச நகர் அருள்நெறித்திருக்கூட்டத்தின் பொன்விழா ஆண்டு தொடக்கவிழாவில்...

பெறுநர்

திரு

C129
திருவருள் திரு சுவாமிகள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
மானகிரி அஞ்சல்
காரைக்குடி வழி



அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166